# மே – 27 – திங்கள்

## கன்றபரி நகர புனித அகஸ்தீன் - ஆயர்

**“தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் வரும்போது என்னைப்பற்றிச் சான்று பகர்வார்.”** *யோவா 15:26*

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி16 : 11 – 15

பவுல், சீலா, திமோத்தேயு லூக்கா ஆகிய நாங்கள் துரோவாவிலிருந்து கப்பலேறிச் சமொத்திராக்கு தீவுக்கும், மறுநாள் நெயாப்பொலி நகருக்கும் நேராகச்சென்றோம்.அங்கிருந்து மாசிதோனியப் பகுதியின் முக்கிய நகரான பிலிப்பி சென்றோம். அது உரோமையரின் குடியேற்ற நகரம். அந்நகரில் சிலநாள்கள் தங்கியிருந்தோம். ஓய்வு நாளன்று நாங்கள் நகர வாயிலுக்கு வெளியே வந்து ஆற்றங்கரைக்குச் சென்றோம். அங்கு இறைவேண்டல் செய்யும் இடம் ஏதேனும் இருக்கும் என்று எண்ணி அமர்ந்து, அங்கே கூடியிருந்த பெண்களோடு பேசினோம்.அங்குத் தியத்திரா நகரைச் சேர்ந்த பெண் ஒருவர் நாங்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் பெயர் லீதியா. செந்நிற ஆடைகளை விற்பவரான அவர் கடவுளை வழிபட்டுவந்தார். பவுல் பேசியதை ஏற்றுக்கொள்ளுமாறு ஆண்டவர் அவர் உள்ளத்தைத் திறந்தார்.அவரும் அவர் வீட்டாரும் திருமுழுக்குப் பெற்றனர். அதன்பின் அவர் எங்களிடம், ”நான் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டவள் என்று நீங்கள் கருதினால் என் வீட்டுக்கு வந்து தங்குங்கள்” என்று கெஞ்சிக் கேட்டு எங்களை இணங்க வைத்தார்.

**பதில்பாடல்:** ஆண்டவர் தம் மக்கள் மீது விருப்பம் கொள்கிறார்.

### நற்செய்தி : யோவான் 15 : 26 –- 16 : 4

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் வரும்போது என்னைப்பற்றிச் சான்று பகர்வார்.நீங்களும் சான்று பகர்வீர்கள். ஏனெனில் நீங்கள் தொடக்கமுதல் என்னோடு இருந்துவருகிறீர்கள். ”நீங்கள் நம்பிக்கை இழந்துவிடாதிருக்க இவற்றையெல்லாம் உங்களிடம் சொன்னேன்.உங்களைத் தொழுகைக்கூடத்திலிருந்து விலக்கி வைப்பார்கள். உங்களைக் கொல்லுவோர் கடவுளுக்குத் திருப்பணி செய்வதாக எண்ணும் காலமும் வருகிறது. தந்தையையும் என்னையும் அவர்கள் அறியாமல் இருப்பதால்தான் இவ்வாறு செய்வார்கள்.இவை நிகழும் நேரம் வரும்போது நான் உங்களுக்கு இவை பற்றி முன்பே சொன்னதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இதற்காகவே இவற்றை உங்களிடம் கூறினேன். ”தொடக்கத்திலேயே நான் இவற்றை உங்களிடம் சொல்லவில்லை. ஏனெனில் நான் உங்களோடு இருந்தேன்” என்றார்.

**தியானம் :** நமது விசுவாச மறைபொருள்களில் முதன்மையானது ‘ஒரே கடவுள் மூன்று ஆட்களாகத் தம்மை வெளிப்படுத்தி யிருக்கின்றார் என்பதே. படைப்பின் தந்தையும், மருவுருவான இறைமகன் இயேசுவும், துணையாளன் தூய ஆவியுமான மூவரும் இணைந்ததே தூய திரீத்துவம் என்னும் ஒரே கடவுள் என்பதை இறைமகன் இயேசுவின் வார்த்தைகள் வாயிலாக நமக்குத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இந்த மறையுண்மையை நாம் நமது மனித புத்திக்குட்பட்ட ஆராய்சிக்குள் கொண்டுவர முடியாது. இம் மறையுண்மையை அறிந்துகொள்ள முற்பட்ட புனித அகுஸ்தீனாருக்கு ‘சமுத்திர நீர் அனைத்தையும் சிறு சிற்பியொன்றினால் ஒரு சிறு பள்ளத்துக்குள் நிரப்ப முனைந்த ஒரு சிறுவனின் செய்பாட்டுக்கு ஒத்ததாகக் காட்டி மறைந்த’ வானதூதரின் கதை நமக்கும் பாடமாக அமையவேண்டும். எனவே, அந்த மறையுண்மையை நாம் நமது விசுவாசக் கண்கள் கொண்டு மட்டுமே உணர்ந்துகொள்ள முடியும். இயேசு “தந்தையை அறிந்திருக்கிறவன் என்னை அறிந்திருக்கிறான். என்னை அறிந்திருகிறவன் தந்தையையும் அறிந்திருக்கின்றான்” என்பதன் வாயிலாகவும், தாமும் தந்தையும் ஒன்றே என்பதையும், தம் இருவரிடமுமிருந்து புறப்படுகின்றவராகிய தூய ஆவியார் நமக்கெல்லாம் துணையாளராகத் தரப்பட்டுள்ளார் என்றும் தம் சீடர்களுக்குப் போதிக்கின்றார். தாம் இவ்வுலகில் செய்த பணியை, தாம் தமது தந்தையிடம் திரும்பிச் சென்றபின்னும் தொடர்வதற்கு தமது சீடர்களுக்கு வழித்துணை தூயஆவியாரே என்பதையும், அதனைத் தொடர்ந்து இன்று தமது பணியைத் தொடரும் ஒவ்வொரு பணியாளனுக்கும் தூயஆவியாரே துணையாளன் என்பதையும், தப்பான போதனைகளை நாம் அடையாளம் காணச் செய்பவரும் அவரே. எனவே, தூய ஆவியாரிடம் மன்றாடி நம் பணிவாழ்வைத் தொடர்வோம்.